செ. கு. எண்: 049 நாள் :27.02.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.2.2014

பெரம்பலூர் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. I.சர்புதின் அவர்கள் 31.1.2014 அன்று கோணேரிபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.பிச்சைகனி அவர்கள் 31.1.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்

சேலம் மாவட்டம், ஆத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ரமேஷ் அவர்கள் 1.2.2014 அன்று கொத்தாம்பாடி அருகே, சேலம் - ஆத்தூர் நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.பங்கிராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 2.2.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், ஆயுதப்படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சத்தியேந்திரன் அவர்கள் 3.2.2014 அன்று திருஉத்திரகோசமங்கை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றப்பதிவேடுகள் கூடத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.பூவேந்திரன் அவர்கள் 5.2.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. L.பத்மநாபன் அவர்கள் 6.2.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், அறச்சலூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.சுந்தரம் அவர்கள் 7.2.2014 அன்று அறச்சலூர், அவல்பூந்துறை – வெள்ளவேடு சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சென்னிமலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.யுவராசு அவர்கள் 8.2.2014 அன்று காங்கயம் சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.சந்திரன் அவர்கள் 11.2.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் சர்புதின்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பிச்சைகனி, பங்கிராஜ், பத்மநாபன், சந்திரன்; தலைமைக் காவலர்கள் ரமேஷ், பூவேந்திரன், சுந்தரம், யுவராசு; காவலர் சத்தியேந்திரன்; ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9